RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1916

OPEN ACCESS

# பா. விஜயின் திரையிசைப் பாடல்களில் அழகியல் கோட்பாடுகள்

**ப. செந்தில்நாதன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்-621220, தமிழ்நாடு, இந்தியா

# Aesthetic Principles in P. Vijay's Screen Songs

**P. Senthilnathan [a, *]**

[a] Department of Tamil, Thanthai Hans Roever College (Autonomous), Elambalure, Perambalure-621220, Tamil Nadu, India

* Corresponding Author: senthilvetchi@gmail.com

Received: 09-08-2022
Revised: 30-09-2022
Accepted: 08-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Many natural and artificial things are created by human. The basis of aesthetic analysis is to study the method of expressing the aesthetic feelings found in God's creations, such as love, character of a person, and form. Aesthetics identifies and interprets this beauty as it is. There are views and ideologies about what beauty is rather than what it is. Generally, aesthetics is a concept that is built on arts. Aesthetics is the source of power for various arts such as in paintings, music and songs. Therefore, this methodology is considered as an art-literary theory. Writers of aesthetic theory and about its history, begin with Aristotle's Poetics. Aesthetics is an expression of civilization and tradition. Thus, many poems are written. The ideas in the poems create different thoughts in people's minds. In this, screen songs composed by the poets easily reaches the audience. This article examines the aesthetic principles found in the screen songs of poet P. Vijay.

**Keywords:** Descriptive, Synthesis and Classification Method, Comparative Method

## முன்னுரை

இயற்கையாகவும் செயற்கையாகவும் பலவற்றில் மனிதன் படைத்தவை. இறைவன் படைத்தவைகளில் அன்பு, குணம், வடிவம் என்று பல உண்டு அதில் காணப்படும் அழகியல் உணர்வுகளை சொல்லும் முறையினை ஆய்வு செய்வதே அழகியல் திறனாய்வின் அடிப்படையாகும். அழகியல் இந்த அழகை இன்னது இத்தகையது என்று கண்டறிந்து விளக்குகிறது. அழகு எவ்வாறெல்லாம் இருக்கிறது என்பதை விட எவ்வாறெல்லாம் அது பற்றிய பார்வைகளும் கருத்தியல்களும் இருக்கின்றன. பொதுவாக இவ்வழகியல் கலைகளின் மீது கட்டமைக்கப்படுகின்ற ஒரு கருத்துமைவு ஆகும். மேலும் ஓவியம், இசை, பாடல் முதற்கொண்டு இலக்கியம் வரை பலவிதமான கலைகளுக்கும் அழகியலே ஆதாரமான சக்தியாக விளங்குகின்றன. ஆதலின் இவ்வழகியல் கலை-இலக்கிய கோட்பாடாகவே கொள்ளப்பட்டு வருகிறது. மேலை நாடுகளில் இலக்கிய கோட்பாடு பற்றி எழுதுகிறவர்களும் அதே மாதிரி அழகியல் கோட்பாடும் அதன் வரலாறும் பற்றி எழுதுகிறவர்களும் அரிஸ்டாட்டலின் கவிதைகளிலிருந்து தொடங்குகிறார்கள். அதுபோலவே வடமொழியில் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகிறவர்கள் கலை இலக்கியக் கோட்பாட்டையும் மூலாதாரங்கள் பொதுவானவையாகவே இருக்கின்றன.

கால வளர்ச்சிக்கு ஏற்ப ஒரு நாகரிகம், ஒரு மரபு என்பதன் வெளிப்பாடாக அழகியல் இருக்கிறது. அந்த நாகரீகத்தின் ஒரு அடையாளமாக புதுக் கவிதைகள் அமைகின்றன. கவிதைகளில்

இடம்பெறும் கருத்துக்கள் பல்வேறு சிந்தனைகளை மக்கள் மனதில் ஏற்படுத்துகிறது. இதில் திரை இசைப் பாடல்கள் எளிமையாக அனைவரையும் சென்றடைகின்றன. அவர்கள் திரையிசைப் பாடல்களில் காணப்படும் அழகியல் முறையினை இக்கட்டுரை ஆராய்கின்றது (Vijay, 2005).

## அழகியல் திறனாய்வு

அழகியல் திறனாய்வின் முக்கியமான பண்பு கவிதை, எளிமையாக இருக்க வேண்டும் என்பது ரசிப்பதற்கு 'சிரமம்' இருக்கக்கூடாது உடனடியாகப் புரிதல் வேண்டும் என்பது இவர்களின் ஓர் அளவுகோல் அதனால் "சங்க இலக்கியத்தை டி.கே. சி முதலியவர்கள் புறக்கணித்தார்கள். சங்க இலக்கியத்தில் கடினமான சொற்கள் இருக்கின்றன என்பது இவர்களின் குற்றச்சாட்டு தவிர இலக்கியத்தை ரசிப்பதற்கு சொற்கள் மட்டுமல்லாமல் அதன் உள்ளடக்கமும் 'சிரமம்' தரக்கூடாது என்று இவர்கள் கருதுகிறார்கள்" (Natarajan, 2003).

இலக்கியத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைவிட எப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் என்பதுமே அழகியல் திறனாய்வு பற்றிய விவாதத்தின் அடிப்படையாகும்.

"அழகியல் (ஆங்கிலம்: Aesthetics அல்லது Aesthetics அல்லது Aesthetics) என்பது அழகின் தன்மையை ஆராய்வதும் கலை படைப்புகளில் அழகை இனம் கண்டு இரசிப்பதும் சுவையுடன் படைப்புகளைப் படைப்பதும் பற்றிய இயலாகும்." அழகியலை ஒவ்வொரு ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் தங்களது கருத்துக்களை பதிவு செய்து கொண்டே செல்கின்றனர் (Kamalakannan, 2005). இவற்றில் மாற்றங்கள் காலமாற்றத்திற்கேற்ப ஏற்படுகின்றன.

## முறுகியலும் கவிதையும்

கவிதைக்கென்று தனிப்பட்ட பண்புகள் பல இருக்கின்றன. சான்றாக எதுகை, மோனை அடுக்குத்தொடர், உவமை, உவமானம் முதலியவற்றின் பயன்பாட்டைக் கூறலாம். இவையெல்லாம் கவிதைக்கு அழகு சேர்க்கின்றன. "முருகியில் கூறுகள் அதாவது கவிதையோ அழகூட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒட்டுமொத்தமான மொழிக் கூறுகளைக் குறிக்கும் கலைச் சொல்லாகும். இந்த அழகியல் கூறுகளை இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று தனிநிலை முருகியல் கூறுகள் (Aeshetic Aspects in in Isolation). இந்த மொழிக் கூறுகள் ஒவ்வொன்றையும் ஒரு கவிதையில் தனித்தனியாகப் பிரித்து அறிய முடியும். இவற்றை கீழ்வரும் பதினொரு வகைகளாகப் பிரித்து அறியலாம். அவையாவன தொடை வகைகள், உவமை, உருவகம், மரபு தொடர்கள், குறிப்பு முரண், அங்கதம், பொருள் மயக்கம், மெய்ப்பாடு, படிமம், குறியீடு, யாப்பு இரண்டாவது கூட்டு நிலை முருகியல் கூறுகள். இக்கூறுகளை முக்கியமாக உரைக் கோவையில் காணலாம். இதற்குச் சான்றாக குறிப்பிட்ட நடை பழமொழிகளுக்கும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள கருத்துச் சூழலுக்கும் உள்ள தொடர்பு மரபு கதைகள் அதனோடு தொடர்புடைய கிளைக் கதைகள் முதலியவற்றை கூறலாம்" (Kamalakannan, 2005).

இந்தக் கட்டுரை கவிஞர் பா. விஜய் திரையிசை பாடல்களில் காணப்படும் மெய்ப்பாடு தொடர்பான முருகியல் கூறுகளைப் பிரித்தறிந்து இக்கூறுகள் பாடல்களில் எங்கனம் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதை ஆராய முற்படுகிறது.

## மெய்ப்பாடு

கருத்து பரிமாற்றச் சூழலில் ஒருவருடைய உணர்ச்சிகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகிற புறப்புலப்பாடுகளை மெய்ப்பாடு என்று கூறலாம். இவ்வகையான மெய்ப்பாடு நேர்முக உரையாடல்களின் போது மொழிசாரா வெளிப்பாடுகளாகவோ, உணர்வுகளின் பயனாக வெளிப்படும் குறள் ஏற்றத்தாழ்வுகளாகவோ, தொடு உணர்வுகளாகவோ வெளிப்படலாம். எழுத்தின் வாயிலாக வெளிப்படும் பொழுது எழுத்து நடை உணர்வுகளின் தனிப்பட்ட சொல்லாட்சி குறியீடுகளின்

பயன்பாடு முதலியவற்றைக் கூற முடியும். சமுதாயத்தில் அன்றாடம் நடைபெறும் பல்வேறு விதமான கருத்துப் பரிமாற்ற சூழல்களின் தாக்கம் மனித உறவுகளிடையே அவ்வபோது தோன்றி மறைகிற உணர்வுகளின் வெளிப்பாடு முதலியவற்றின் அடிப்படையில் மனித உணர்வுகளைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் பின்வரும் எட்டு அடிப்படைக் கூறுகளின் வாயிலாக விளக்குகின்றார். அவையாவன,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று

அப்பால் எட்டு மெய்ப்பாடு என்ப"

இந்த எட்டினை அடிப்படையாகக் கொண்டு மெய்ப்பாட்டியலை மைய எல்லையாகக் கொள்ளலாம் (Ilampuranar, 2006).

## நகை

நகை என்ற சொல்லிற்கு "ஆபரணம், இகழ்ச்சி மகிழ்ச்சி தோன்றக் கூறுமலங்காரம், இன்பம், எயிறு, ஒளி, களிப்பு, சிரிப்பு, நகையென்னவல் பல், பூ, மொட்டு, மலர்ச்சி என்று அகராதி விளக்கம் தருகின்றது (Kazhaga Tamizh Agaraathi, 1998).

“தொல்காப்பியர் நகையை

எள்ளல் இளமை பேதைமை மடனென்று

உள்ளம் பட்ட வகைதான் கென்க"

என்கிறார். இதன் அடிப்படையில் கவிஞர் பா விஜய் அவர்கள் எழுதிய பாடல்களில் காணலாம் (Ilampuranar, 2006).

நவீன காலத்தில் தலைவனும் தலைவியும் தங்களது தோழமை வாழ்வினையும் காதல் வாழ்வினையும் பகிர்ந்து கொள்ளும் பாங்கினை எள்ளல் நடையில் கொடுத்துள்ளார் கவிஞர்.

“தோழி என்றொரு வார்த்தையிலே

நாங்கள் உங்களை கூப்பிடுவோம்

கோழை பேச்சுக்கள் வேண்டாமே

காதலி என்றே கூப்பிடுங்கள்"

என்ற வரிகளில் பெண்கள் ஆண்களை எள்ளல் செய்வது போன்று பாடல் வரிகள் அமைத்துள்ளார் (Vijay, 2005).

"மனசே இள மனசு மலரும் பூ மனசு

மனதில் நினைத்ததெல்லாம் நடக்கும்

நான் இதுவே

என்றும் சந்தோஷம் எங்கும் சந்தோஷம்

வானம் வரைக்கும் அடடா எங்கும்

சந்தோஷம்"

மகிழ்ச்சி இளமைப் பருவத்தில் மட்டுமன்று மனது எப்போதும் இளமையாக வைத்துக் கொள்ள இயலும் என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன (Vijay, 2005).

## அழுகை

அழுகை என்பது அவலம் இரக்கம் தானே அவலித்தலும், அவலம் கண்டு அவலித்தலும் என இருவகைப்படும். அழுகை விரிந்து நடப்பதை தொல்காப்பியர்,

"இளிவே இழவே அசைவே வறுமையென

விளிவேல் கொள்கை அழுகை நான்கே"

தலைவனும் தலைவியும் களவு வாழ்வில் நிகழ்த்தவற்றை நினைத்து தனிமையில் வருந்துவதாக கவிஞர் எழுதிய பாடல் வரிகள் பின்வருமாறு (Ilampuranar, 2006),

"காத்தா நான்தான் நாம

ஒன்று சேர்ந்த மண்ணுல

இப்போ வெள்ளக் காடா

பூவா பூவா நாம

பூத்திருந்த பூமியும்

எல்லாம் தரிசல் மேடா"

இப்பாடல் வரிகள் முழுமையும் களவின்போது நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளும் குடும்பத்தினர் இல்லறக் காவலில் வைத்தால் தடைப்பட்டதால் வருந்துகிறாள் என்று எடுத்துரைக்கின்றது (Vijay, 2005).

தலைமகன் ஒருவன் தன்னிடம் உள்ள குறைகளை மட்டும் கணக்கில் கொண்டு தாழ்வு மனப்பான்மையினை வளர்த்து அதில் மூழ்கி போகிறான். அவனை எழுச்சி அடையச் செய்வதாக தலைமகனின் தோழி பாடுவதாக கவிஞர் அழுகை மெய்ப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆண்: "செடியிலே பூ பறிக்க

வேருக்கு விரல் வலிக்க...

வலியைத்தான் இதில் மறைக்க

வசனம் நீ படிக்க.

பெண்: ஒன்றய் எடுத்தால்

ஒன்றய் கொடுக்கும்

தெய்வத்தின் தீர்ப்பு இது"

இவ் வரிகள் அழுகை சுவையினையும் அழகுப்படுத்திக் கவிதைச் சரம் தொடுத்துள்ளார் கவிஞர் (Vijay, 2005).

## இளிவரல்

இளிவரல் என்பது இழிபு அதாவது மானக்குறைவு: இளிவரல் எனும் இம்மெய்ப்பாடு தோன்றுவதை

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு

யாப்புற வந்த இளிவரல நான்கே"

கதையின் தலைவனின் முகத்தில் ஒருபுறம் தீக்காயங்களால் முகம் மாறிவிடுவதால் உலக வாழ்க்கையின் மீதும் இறைவன் மீதும் நம்பிக்கையினை இழந்து விடுகிறான் (Ilampuranar, 2006). அதனை,

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

உலகமும் சொல்வது தான்.

ஆசை வந்தால் அவஸ்தை வருமே

அறிவுரை மாற்றி விடு.

அடடா உன் பேச்சு என் காதுக்கு சுமை

தானே"

தன்னை சுற்றி இருப்பவர்களையும் வெறுக்கும் அளவிற்கு அவனது பிணி மாற்றியது என்பதை கவிஞர் தெளிவுபடுத்துகிறார் (Vijay, 2005).

## மருட்கை

"மருட்கை என்பது வியப்பு இதனை தொல்காப்பியர்,

புதுமை பெருமை சிறுமை ஆக்கமோடு

மதிமை சாலா மருட்கே நான்கே"

இயற்கையின் அற்புதங்கள் அனைத்துமே நம்மை வியப்பில் ஆழ்த்துவதாகவே உள்ளன என்பதை கவிஞர் தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார் (Ilampuranar, 2006).

"மரங்களே மரங்களே ஒற்றை காலில்

இருப்பதேன்

என்னவோ என்னவோ தவமா

நதிகளே நதிகளே சத்தம் போட்டு தான்

நடப்பதேன்

கால்களில் விரல்களே கொலுசா"

இறைவனின் படைப்பில் அனைத்தும் நம்மை வியப்பில் மூழ்கச் செய்வதாகவே உள்ளன என்பதை எடுத்துக்காட்டும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது (Vijay, 2005).

## முடிவுரை

அழகென்பது உண்மை சார்ந்தது. அது புலவர்களின் வழி அறியக்கூடியதாயினும் கருத்தால் உணரப்படுவது. எனவே, அவரவரின் உளக்கருத்தால் வரையறுக்கப்படுகின்றது. மனிதனின் அறிவு அனுபவம், சூழல், கற்பனை ஆகியவற்றிற்கு ஏற்ப அழகுணர்வு வேறுபாட்டையும் தன்மையது. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்களிலும், எழுத்து நிலையிலும், சொல் நிலையிலும், தொடர் நிலையிலும், காட்சி நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் வெளிப்படும் அழகியல் உணர்வு ஒரு கோட்பாடாகவே உருவாக்கித் தரும் அளவிற்குச் சொல்லாக்கம் பெற்றுள்ளது. இதில் பா. விஜய் திரை இசை பாடல்களில் மெய்ப்பாட்டு அழகியலை வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## References

Ilampuranar, (2006) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India.

Kamalakannan, P. (2012) Sevviyal Ilakkiyankalil Pulappadum Azhagiyal Parinamangal, Erode, India.

Natarajan, T.S. (2003) Thiranaivu kalai, New century Book House, Chennai, India.

Vijay, P. (2005) Paa. Vijay Padalkal Part-1, Kumaran Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License